**அக்டோபர் – 14**

# TNPSC துளிகள்

- ஃபோர்ப்ஸ் இந்தியா செல்வந்தர் பட்டியல் 2019 என்ற பட்டியலை "ஃபோர்ப்ஸ் இந்தியா" அமைப்பு வெளியிட்டது. இந்தப் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்து 12வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்தார்.
- மைக்ரோசாப்ட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான பில் கேட்ஸின் ஒரு புதிய புத்தகம் "ஒரு காலநிலைப் பேரழிவை எவ்வாறு தவிர்ப்பது: நம்மிடம் உள்ள தீர்வுகள் மற்றும் நமக்குத் தேவையான முன்னேற்றங்கள்" என்ற தலைப்பில் ஜூன் 2020 அன்று வெளியிடப்படும்.
- ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தொடர்ச்சியான அதிக வெற்றிகள் என்ற சாதனையாக இலங்கை அணியைத் தோற்கடித்து தனது 18வது வெற்றியைப் பெற்றது.
    - 1997 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தொடர்ச்சியாக 17 வெற்றிகளைப் பெற்ற தம்முடைய அணியின் சாதனையை அவர்களே இந்த 18வது வெற்றியின் மூலம் முறியடித்துள்ளனர்.

# தேசியச் செய்திகள்

## மாநிலங்களின் சுகாதார அமைப்பைப் பலப்படுத்தும் நிலைமை மீதான அறிக்கை : 2018 - 2019

- சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களின் சுகாதார அமைப்புகளைப் பலப்படுத்தும் நிலைமை மீதான அறிக்கை வெளியிடப் பட்டது.
- 2018-19ம் ஆண்டில் பல்வேறு சுகாதார அளவீடுகளின் மீதான தங்களது மோசமான செயல்திறன் காரணமாக தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் 14 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு அபராதங்கள் விதிக்கப்பட்டன.
- தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, அரியானா, அசாம், கேரளா மற்றும் பஞ்சாப் ஆகியன சிறப்பாகப் பணியாற்றிமையில் முதல் ஐந்து இடத்திலிருக்கும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களாகும்.
- 30 வயதிற்கு மேற்பட்ட மக்கட்தொகையினரை முழுமையாக 100 சதவிகிதம் சோதிப்பதில் முதலிடத்தில் தமிழ்நாடும், அதனைத் தொடர்ந்து கோவா (68 சதவிகிதம்) மற்றும் டாமன் & டையூ (57 சதவிகிதம்) ஆகியனவும் உள்ளன.

## சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் மத்திய மன்றத்தின் 13வது மாநாடு

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் ஹர்சவர்தன் புது தில்லியில் சுகாதார மற்றும் குடும்பநலத் துறையின் மத்திய மன்றத்தின் 13வது மாநாட்டைத் துவக்கி வைத்தார்.
- இதன் நோக்கம் : தேசிய சுகாதார முன்னுரிமைகள் மீது ஒரு கருத்தொற்றுமையை உருவாக்குதல்
- இம்மாநாடு சுகாதார நலனின் 4 தூண்களின் மீது நடத்தப் பட்டது.

- அனைவருக்குமான சுகாதார சேவை
- திட்ட ரீதியிலான செயல்பாடுகள்
- தரமான மற்றும் அணுகிடும் வகையிலான மலிவான சுகாதார சேவைகள்
- தகுந்த உள்கட்டமைப்பு

❖ இம்மாநாட்டின் போது 'சுரக்சித் மாத்ரிவ ஆஸ்வாசன்' என்ற கர்ப்பிணி மற்றும் குழந்தை இறப்புகளை முழுவதும் தடுத்தல் என்ற புதிய திட்டமும், அதற்கான வலைதளம் மற்றும் அதற்கான குறை தீர்ப்பு இணைய வாயிலும் துவங்கப் பட்டன.

❖ மேலும் அவர் அம்மாநட்டில் பின்வரும் அறிக்கைகளையும் வெளியிட்டார்.

- 2019ம் ஆண்டிற்கான தேசியப் பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாட்டு ஆய்வு.
- தேசிய நீரிழிவு மற்றும் நீரிழிவு காரணமான விழித்திரைப் பாதிப்பு ஆய்வின் மீதான முதல் அறிக்கை




## தொழில்நுட்பம் மீதான G20 உலகளாவிய பொலிவுறு நகரங்களுக்கான கூட்டணி

❖ தொழில்நுட்பம் மீதான G20 உலகளாவிய பொலிவுறு நகரங்களுக்கான கூட்டணியின் ஒரு உறுப்பினராக இந்தியா சேர்ந்திருக்கின்றது.

❖ இது பொலிவுறு நகரங்களுக்கான தொழில்நுட்பங்களின் பொறுப்பான மற்றும் சரியான பயன்பாட்டை மேம்படுத்துவதில் பணியாற்றுகின்றது.

❖ உலகப் பொருளாதார மன்றம், பொது தனியார் பங்களிப்பிற்கான சர்வதேச அமைப்பு ஆகியன இந்த கூட்டணிக்கான செயலகமாகப் பணியாற்றுகின்றது.

***இது பற்றி***


❖ இது (இந்தியா சேர்ந்ததை அடுத்து) 16 நாடுகளைக் கொண்ட உலகின் முன்னணி நகரப் பிணைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிர்வாக அமைப்புகள் ஆகியவற்றின் ஒரு கூட்டணி ஆகும்.

❖ இது 2019ம் ஆண்டில் ஜூன் மாதம் ஜப்பானின் ஒசாகாவில் நடைபெற்ற G20 மாநாட்டுடன் இணைந்து ஏற்படுத்தப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## பார்வை மீதான முதல் உலக அறிக்கை

- உலக சுகாதார அமைப்பு பார்வை மீதான தனது முதல் அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த அறிக்கையின் படி, உலக அளவில் ஏறக்குறைய 2.2 மில்லியன் மக்கள் பார்வைக் குறைபாட்டுடனோ அல்லது பார்வையற்றவராகவோ வசிக்கின்றனர்.
- அதில் ஏறக்குறைய ஒரு மில்லியன் மக்களின் நிலைமை முன்பாகவேத் தடுக்கப் பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் மேல் இனிமேல் கவனம் செலுத்தப் பட வேண்டும்.
- இது அந்தப் பிரச்சினைகளையும் அதற்கான செயல்பாடுகளையும் இணைந்து உறுதிப்படுத்திட எண்ணுகின்றது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நெகிழிப் பொருட்களை உண்ணும் பாக்டீரியா

- கிரேட்டர் நொய்டாவில் உள்ள சிவ் நாடார் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு, இரண்டு 'நெகிழிப் பொருட்களை உண்ணும்' பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்த பாக்டீரிய விகாரங்கள் ஆனது எக்சிகுயோபாக்டீரியம் சிபிரிகம் திரிபு டிஆர் 11 மற்றும் எக்சிகோபாக்டீரியம் அன்டே திரிபு டிஆர் 14 எனப் பெயர் கொண்டுள்ளது.
- ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிப் பொருட்களான தூக்கியெறியக் கூடிய குழாய்கள், தட்டுகள், கரண்டிகள், பொம்மைகள், பொதிகட்டும் பொருட்கள் போன்றவற்றில் முக்கிய அங்கமாக இருக்கும் பாலிஸ்டிரீனைச் சிதைப்பதற்கான திரிபுகளுக்கு இந்த பாக்டீரியாக்களின் திரிபுகள் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

### முதல் செயற்கைக் கோள் சேவை விண்கலம்

- கஜகஸ்தானில் உள்ள விண்கலங்களுக்காக ரஷ்யாவின் ஏவுதளத்திலிருந்து செலுத்தப் பட்ட ரஷ்ய புரோட்டான் ராக்கெட்டின் மூலமாக "MEV-1" (திட்டம் நீட்டிப்பு வாகனம் -1) என்று பெயரிடப்பட்ட முதல் செயற்கைக் கோள் சேவை விண்கலம் விண்ணில் ஏவப் பட்டுள்ளது.
- வணிக விண்வெளித் திறன்களுக்கான ஒத்துழைப்புகள் எனப்படும் நாசா கூட்டாண்மை அமைப்புடன் இணைந்து அமெரிக்காவின் நார்த்ரோப் க்ரூமன் என்ற அமைப்பு இதை உருவாக்கியுள்ளது.
- குறைவான எரிபொருளால் இயங்கும் மற்றும் தனக்குத் தேவையான எரிபொருளைத் தானே நிரப்புகின்ற வகையில் செயல்படும் இந்த MEV விண்கலம் விண்வெளியில் உள்ள எந்த செயற்கைக் கோளையும் கண்டுபிடிப்பதிலும் அவற்றை இணைப்பதிலும் பயன்படுகிறது.
- எனவே, தற்போது பூமியைச் சுற்றியுள்ள புவிசார் சுற்றுப்பாதையில் இருக்கும் வணிக செயற்கைக் கோள்களின் ஆயுளை நீட்டிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ICON விண்வெளி வானிலை செயற்கைக் கோள்

- அமெரிக்காவின் புளோரிடாவிலிருந்து அயன மண்டல இணைப்பு ஆய்வு (Ionospheric Connection Explorer - ICON) விண்வெளி வானிலை செயற்கைக் கோளை நாசா வெற்றிகரமாக ஏவியுள்ளது.
- அயன மண்டலம் என்பது பூமியின் வளிமண்டலத்தின் அடுக்கு ஆகும். இது அதிக அயனிகள் மற்றும் கட்டற்ற எலக்ட்ரான்களைக் கொண்டுள்ளது. மேலும் இது ரேடியோ அலைகளை பிரதிபலிக்கக் கூடியது.
- 2 வருடங்களுக்கும் மேலாக, கீழே நிலப்பரப்பு வானிலையில் இருந்து விண்வெளி வானிலையைச் சந்திக்கும் இடமான வளிமண்டலத்தின் மாறக் கூடிய மண்டலத்தைப் பற்றிய ஆய்வை இது மேற்கொள்கின்றது.
- முன்னதாக 2018 ஆம் ஆண்டில், நாசா அமைப்பானது கோல்டு என்ற செயற்கைக் கோளை ஏவியது. இது மேல் வளிமண்டலத்தை ஆய்வு செய்கிறது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### அரசுக் குடியிருப்புகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான வலைதளம் & செல்லிடப் பேசி பயன்பாடு

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மத்திய இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) ஹர்தீப் சிங் பூரி, "m-ஹரியாலி" என்ற புதிய செல்லிடப் பேசி பயன்பாட்டையும், "அரசுக் குடியிருப்புகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு" என்ற வலைதளத்தையும் புதுதில்லியில் அறிமுகப் படுத்தினார்.
- இது மக்களை மரங்கள் நட்டு வளர்ப்பதற்கும் பசுமை இயக்கங்கள் வழி நடப்பதற்கும் ஊக்குவிக்கிறது.
- இது தாவரங்களில் தானியங்கிப் புவிக் குறியீட்டை வழங்குகிறது. இது பயனர்கள் எளிதாக பயன்படுத்துவதற்கு உகந்த வகையில் இருக்கின்றது. மேலும் இது எந்த ஆண்ட்ராய்டு வசதி கொண்ட செல்லிடப் பேசியிலும் வேலை செய்கிறது.

- செயலி மற்றும் வலைதளம் ஆகிய இரண்டையும் தேசியத் தகவல் மையம் & வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் இணைந்து உருவாக்கியுள்ளது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய எந்தவொருத் தகவலையும் பொதுமக்கள் இவைகளில் பதிவேற்றலாம். அவை www.epgc.gov.in என்ற இணையதளத்தில் காண்பிக்கப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுகாதார மன்ற விருது - 2019

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலகளாவிய அமைப்பு (Global Organisation of People of Indian Origin - GOPIO), சுகாதாரத் துறையில் சிறப்பாகப் பங்காற்றியவர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான சுகாதார மன்ற விருதினை வழங்கியது.
- உலகெங்கிலும் உள்ள இந்திய வம்சாவளியினரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை இந்த உச்சி மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விருது பெற்ற மற்றவர்களில், 3 இந்திய அமெரிக்கர்களுக்கு சுகாதார மன்ற விருது வழங்கப் பட்டது.

| பெயர் | விருது வழங்கப்பட்ட பிரிவு |
|---|---|
| **ராகுல் சுக்லா** | சமீபத்திய மருத்துவ உபகரணங்களின் உற்பத்தி. |
| **ஹிதேஷ் பட்** | சுகாதார தொழில்நுட்ப வகை. |
| **எச் ஆர் ஷா** | இந்திய வம்சாவளியினர் மத்தியில் சுகாதார விழிப்புணர்வை ஊக்குவித்தல். |

# முக்கிய தினங்கள்

## உலகப் பார்வை தினம் - அக்டோபர் 10

- உலகப் பார்வை தினம் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் இரண்டாவது வியாழக் கிழமையில் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு, உலகப் பார்வை நாள் 2019 அக்டோபர் 10 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டில் சர்வதேச அரிமா சங்க அறக்கட்டளையின் "பார்வை முதலில்" என்ற பிரச்சாரத்தின் மூலம் ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட இந்த நாள் பார்வையற்றத் தன்மை மற்றும் பார்வைக் குறைபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "பார்வை முதலில்".




### உலக மனநல தினம் - அக்டோபர் 10

- உலக மனநல தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 10 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.
- மனநலப் பிரச்சினைகள் மற்றும் மன ஆரோக்கியத்தை ஆதரிக்க தேவையான முயற்சிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இது உலக சுகாதார அமைப்பின் ஆதரவுடன், மனநலத்திற்கான உலகக் கூட்டமைப்பு, தற்கொலைத் தடுப்புக்கான சர்வதேசச் சங்கம் மற்றும் உலகளாவிய மன ஆரோக்கியத்திற்கான ஒருங்கிணைந்த அமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 2019க்கான கருப்பொருள் "தற்கொலை தடுப்பு".




## இதரச் செய்திகள்

### 2019 ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீட்டுத் தரவரிசை

- சமீபத்திய 2019 ஹென்லி கடவுச் சீட்டுக் குறியீட்டுத் தரவரிசை வெளியிடப்பட்டது.
- தற்போது இந்த அறிக்கையில், இந்தியா 2019 ஆம் ஆண்டில் 82வது இடத்தில் உள்ளது. இது 2018 ஆம் ஆண்டில் அதன் முந்தைய தரவரிசையான 81வது இடத்திலிருந்து ஒரு இடம் பின்தங்கியுள்ளது .
- ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இரண்டு நாடுகளும் இந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்று இருப்பதன் மூலம் மிகவும் சக்திவாய்ந்த கடவுச் சீட்டை அவை வைத்திருக்கின்றன என்பது தெளிவாகிறது.
- இந்த ஆய்வு ஹென்லி நிறுவனம் & அதன் பங்குதாரர்களால் நடத்தப் பட்டது.

| தர வரிசை | நாடுகள் |
|---|---|
| 1 | ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் |
| 2 | தென் கொரியா, ஜெர்மனி மற்றும் பின்லாந்து |
| 3 | டென்மார்க், இத்தாலி மற்றும் லக்சம்பர்க் |
| 4 | பிரான்ஸ், ஸ்பெயின் மற்றும் சுவீடன் |
| 5 | ஆஸ்திரியா, நெதர்லாந்து மற்றும் போர்ச்சுகல் |
| 82 | இந்தியா |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★